www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6.

ந.க.எண். 06924 / கே2 / 2024, நாள் : 28.03.2024.

……………………

பொருள் : தொடக்கக் கல்வி – 2024–25ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி / ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி (TAB) – மாவட்டக் கல்வி அலுவலர்கள் கையடக்கக் கணினிகளை பெற்று பாதுகாப்பாக பராமரித்தல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை : 1. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் 2021–22, 2022–23, 2023–24

2. மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.3480/ அ7/ புதிய உ.தொ.கணினி ஆய்வகம் /ஒ.ப.க / 2023, நாள் : 22.3.2024

……………………

தமிழ்நாட்டில் செயல்படும் அரசு மேல்நிலை பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலை பள்ளிகளில் உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகங்கள் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் திறன் வகுப்பறைகள் அகண்ட வரிசை இணையதள வசதியுடன் அமைப்பது குறித்தும் ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி வழங்குதல் குறித்தும் பார்வை (1)யில் கண்டுள்ள மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடர்களின் போது அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

மாறி வரும் கற்றல் – கற்பித்தல் முறைகளுக்கேற்ப தங்களை மெருகேற்றிக் கொள்ளவதற்கு அனைத்து அரசு / நகராட்சி / ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கையடக்கணினி (TAB) வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பார்வை (2)யில் காணும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளின்படி கையடக்கக் கணினிகள் முதல் சுற்றில் 9 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக் கல்வி) பின்வருமாறு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

www.Padasalai.Net

| Spell - 1 | | | |
|---|---|---|---|
| S. No | Revenue District | DEE - District | Count |
| 1 | CHENGALPATTU | CHENGALPATTU (DEE) | 1798 |
| 2 | CHENNAI | CHENNAI (DEE) | 1744 |
| 3 | KANCHEEPURAM | KANCHEEPURAM (DEE) | 1365 |
| 4 | TIRUVALLUR | PONNERI (DEE) | 1509 |
| 5 | TIRUVALLUR | TIRUVALLUR (DEE) | 1414 |
| 6 | RANIPET | RANIPET (DEE) | 1549 |
| 7 | VELLORE | VELLORE (DEE) | 1703 |
| 8 | TIRUVANNAMALAI | CHEYYAR (DEE) | 1659 |
| 9 | TIRUVANNAMALAI | TIRUVANNAMALAI (DEE) | 2055 |
| Total | | | 14796 |

இரண்டாவது மற்றும் மூன்றாவது சுற்றில் கீழ்க்கண்ட மாவட்டங்களுக்கு அட்டவணையில் உள்ளபடி கையடக்கக் கணினிகள் (TAB) அனுப்பி வைக்கப்படுகின்றன.

| Spell - 2 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| S. No | Revenue District | DEE - District | Count | S. No | Revenue District | DEE - District | Count |
| 1 | VILLUPURAM | VILLUPURAM (DEE) | 1573 | 14 | PUDUKOTTAI | ARANTHANGI (DEE) | 1438 |
| 2 | VILLUPURAM | TINDIVANAM (DEE) | 1200 | 15 | PUDUKOTTAI | PUDUKKOTTAI (DEE) | 1836 |
| 3 | PERAMBALUR | PERAMBALUR (DEE) | 813 | 16 | RAMANATHAPURAM | RAMANATHAPURAM (DEE) | 1100 |
| 4 | ARIYALUR | ARIYALUR (DEE) | 1294 | 17 | RAMANATHAPURAM | PARAMAKUDI (DEE) | 1031 |
| 5 | NAMAKKAL | NAMAKKAL (DEE) | 2220 | 18 | TIRUVARUR | TIRUVARUR (DEE) | 1932 |
| 6 | KARUR | KARUR (DEE) | 1734 | 19 | TIRUCHIRAPALLI | TIRUCHIRAPALLI (DEE) | 1396 |
| 7 | DINDUGAL | DINDUGAL (DEE) | 1554 | 20 | TIRUCHIRAPALLI | MUSIRI (DEE) | 1518 |
| 8 | DINDUGAL | ODDANCHATRAM (DEE) | 1438 | 21 | SALEM | SALEM (DEE) | 2096 |
| 9 | DHARMAPURI | DHARMAPURI (DEE) | 1266 | 22 | SALEM | DHARAMANGALAM (DEE) | 2003 |
| 10 | DHARMAPURI | HARUR (DEE) | 1139 | 23 | KALLAKURUCHI | KALLAKURUCHI (DEE) | 1933 |
| 11 | KRISHNAGIRI | KRISHNAGIRI (DEE) | 1628 | 24 | ERODE | GOBI (DEE) | 1204 |
| 12 | KRISHNAGIRI | HOSUR (DEE) | 1383 | 25 | MADURAI | MADURAI (DEE) | 1411 |
| 13 | TIRUPATHUR | TIRUPATHUR | 1383 | 26 | MADURAI | THIRUMANGALAM (DEE) | 1444 |
| | | | | Total | | | 18625 |

| Spell - 3 | | | |
|---|---|---|---|
| S. No | Revenue District | DEE - District | Count |
| 1 | TIRUPPUR | TIRUPPUR (DEE) | 1847 |
| 2 | TIRUPPUR | DHARAPURAM (DEE) | 1333 |
| 3 | COIMBATORE | POLLACHI (DEE) | 1114 |
| 4 | COIMBATORE | COIMBATORE (DEE) | 1757 |
| 5 | THE NILGIRIS | THE NILGIRIS (DEE) | 699 |
| 6 | NAGAPATTINAM | NAGAPATTINAM (DEE) | 941 |
| 7 | CUDDALORE | CUDDALORE (DEE) | 1538 |
| 8 | CUDDALORE | VIRUDHACHALAM (DEE) | 1456 |
| 9 | MAYILADUTHURAI | MAYILADUTHURAI (DEE) | 1026 |
| Total | | | 11711 |

www.Padasalai.Net

இவ்வாறு பெறப்படும் கையடக்கக் கணினிகளை (TAB) தற்போது மேல்நிலைப் பள்ளி / உயர்நிலைப் பள்ளித் தேர்வு வினாத்தாள் கட்டு காப்பு மையங்களில் வைத்து பராமரித்திட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளது.

எனவே, மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) தங்களின் பொறுப்பில் பெறப்படும் கையடக்கக் கணினிகளை (TAB) மிகுந்த பாதுகாப்புடனும் கவனத்துடனும் கையாள வேண்டும் எனவும் இருப்பு வைக்கப்பட்டுள்ள அறை மற்றும் பள்ளி வளாகத்தில் பொருத்தப்பட்டு உள்ள கண்காணிப்பு கேமராக்கள் சரியாக இயங்குகின்றதா என்பதை முறையாக கவனித்து வர வேண்டும் எனவும் காவல் துறையில் இருந்து பாதுகாப்பிற்காக வருகை புரியும் காவலரிடம் ஒவ்வொரு நாளும் பாதுகாப்பு பணிகள் குறித்த தகவலை பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் இரண்டு கட்ட பாதுகாப்பு வளையத்திற்குள் ஒவ்வொரு இருப்பு மையமும் இருப்பதை உறுதி செய்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணிகளில் ஏதேனும் சுணக்கமோ அல்லது கவனக் குறைவான செயல்பாடோ இருக்கக் கூடாது என்று தெரிவிப்பதுடன் பாதுகாப்பு முன்னேற்பாட்டு பணிகளில் மிகுந்த கவனத்துடன் செயல்பட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி), அனைத்து மாவட்டங்கள்.
நகல்
மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6
தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்.